பக்கங்கள் 14 + 06

# மாலை முரசு

கனடா முரசு இணைப்பு




முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 31 சனிக்கிழமை 13.04.2024 அதிர்வு 257

# புத்தாண்டிலிருந்தாவது தமிழரசு ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும்

## சீ.வீ.கே. விநயமான வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

**“இலங்கைத் தமிழரசுக் கட்சியினராகிய நாம், சித்திரைப் புத்தாண்டிலிருந்தாவது பேதங்களைக் களைந்து நபர்களாகவோ, கூட்டாகவோ, அணிகளாகவோ நின்று பேசுவதைத் தவிர்த்துக் குறிப்பாக அணிகள் என்ற நிலையைத் தவிர்த்து கட்சி என்ற ஒரு பொதுச் சிந்தனையில் வந்து ஒற்றுமையாக ஒரே கட்சியாகச் செயற்படுவோம் என்று சபதம் எடுக்க வேண்டும். அதற்கான செயற்பாடுகளில் யாவரும் ஈடுபட வேண்டும் என்றும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்.”**



– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் முக்கியஸ்தரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சீ.வீ.கே.சிவஞானம், கட்சி உறுப்பினர்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

“தமிழ் மக்களின் அடையாளமாக இருந்து வருகின்ற எங்களுடைய தமிழரசுக் கட்சி இப்போது நீதிமன்றத்தில் வந்து நிற்கின்றது. இதனால் எமது கட்சியின் புதிய பதவி நிலைகளுக்கு நீதிமன்றம் தற்போது இடைக்காலத் தடை விதித்திருக்கின்றது. இது மிகவும் வருந்தத்தக்க ஒரு விடயம்.

இது ஒரு சிவில் வழக்கு என்பதால் நீண்ட காலத்திற்குப் போகக்கூடிய ஆபத்தும் இருக்கின்றது. இந்த விடயத்தை சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்று கட்சியின் மூத்த ஓர் உறுப்பினராக எங்களுடைய கட்சிக்காரர்களிடம் ஒரு விண்ணப்பத்தை நான் முன்வைக்கின்றேன்.

ஏனெனில் குறிப்பாக இந்த வழக்கில் – தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனுவில் யாரும் இடைபுகு வாய்ப்பும் ஏற்பாடுகளும் அந்தச் சட்ட கோவையில் இருக்கின்றன. அந்த அடிப்படையில் எங்களுடைய கட்சி உறுப்பினர் ஒருவர் ஏற்கனவே அந்த இடைபுகு மனுவையும் தாக்கல் செய்திருக்கின்றார்.

இவ்வாறு எல்லாம் தொடர்ந்தால் இந்த வழக்கு நீண்டு செல்கின்ற சூழல் ஏற்படும். இவ்வாறான நிலைமையில் தேர்தல் ஒன்று வருகின்றபோது எங்களுடைய கட்சி ஒரு பலவீனமான நிலையிலே செயற்பாடற்ற இயங்கு நிலை இல்லாத ஒரு கட்சியாக இருக்கக்கூடிய சூழல் உருவாகின்றது.

ஆகையினால் இவையெல்லாம் தவிர்க்கப்பட வேண்டும். கட்சியை உடனடியாக இயங்கு நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என்றால் எங்களுக்கு இடையே இருக்கின்ற கருத்து வேறுபாடுகளை மறந்து நாங்கள் ஒருவரையொருவர் குற்றஞ்சாட்டிக் கொண்டிருக்கின்றமையை விடுத்து அதாவது பரஸ்பர குற்றச்சாட்டைத் தவிர்த்து ஒரு ஒற்றுமையான நிலைக்கு வந்து 04▶

## டலஸ் அணியில் உள்ள

# மேலும் 2 எம்.பிக்கள் சஜித்துடன் சங்கமம்?

டலஸ் அழகப்பெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையில் இருக் கும் மேலும் இரு நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தி தலைமையிலான கூட்டணியில் இணையவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர்களான லலித் எல்லாவள, திலக் ராஜபக்ஷ ஆகிய இருவருமே இவ்வாறு இணையவுள்ளனர் என அறியமுடிகின்றது.

டலஸ் அணியில் உள்ள 13 நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஏற்கனவே 04▶



# வீட்டைத் தாக்கிய காட்டு யானை சுவர் இடிந்து இளம் தாய் காயம்

இன்று 13ஆம் திகதி அதிகாலை வீடு ஒன்றின் மீது யானை தாக்கியதில் இளம் தாய் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

திம்புலாகயைச் சேர்ந்த 26 வயதுடைய தாய் சுவருக்கு அடியில் புதையுண்டு, செங்கற்களால் தாக்கப்பட்டுள்ளார்.

இதே காட்டு யானை மகுல்தாமன கிராமத்தில் உள்ள மற்றுமொரு வீட்டை சேதப்படுத்தியுள்ளதாகவும், கிராமத்தை தாக்கி வரும் காட்டு யானையை விரட்ட கிராம மக்கள் பெரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.



# கிளிநொச்சியில் அடாவடித்தனம்



கிளிநொச்சி,பாரதிபுரம் பகுதியில் மது போதையில் வாள்கள் மற்றும் பொல்லுகளுடன் சென்ற குழுவினர் ஒரு வீட்டில் பொருள்களுக்கு சேதம் ஏற்படுத்தியுள்ளமையுடன் வீட்டு உரிமையாளர் மீதும் தாக்குதல் மேற்கொண்டுள்ளனர்.

கிளிநொச்சி பாரதிபுரம் பகுதியில் நேற்று வெள்ளிக்கிழமை இரவு 11 மணியளவில் வீடு ஒன்றுக்குள் புகுந்த மேற்படி குழுவினர் வீட்டின் உரிமையாளரை தாக்கியமையுடன் பெறுமதியான பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

சம்பவத்தில் கயமடைந்தவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



# கிளிவெட்டியில் பிடிபட்ட முதலை

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை கிளிவெட்டி கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட முத்துமாரி நகர் கிராமத்துக்குள் முதலையொன்று நுழைந்துள்ளது.

9 அடி நீளமான முதலையொன்று கிராமவாசிகளால் பிடிக்கப்பட்டு வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இந்த முதலை நேற்று இரவு கிராமத்துக்குள் நுழைந்ததாகவும் இன்று காலை அத்னுஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள தாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

# மாட்டுடன் மோதி விபத்து; இரண்டு பேர் படுகாயம்!

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை - ஹொரவ் பொத்தான பிரதான வீதி கம்பகொட்ட பகுதியில் மாட்டுடன் மோதி விபத்துக்குள்ளானதில் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து மட்டக்களப்பு நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த போது இன்று (13) காலை இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்த விபத்தில் மட்டக்களப்பு பாரதி லேன் பகுதியில் வசித்து வரும் யோக நாதன் அசோக்குமார் (வயது 40) மற்றும் சுப்ரமணியம் சிவசுப்ரமணியம் (வயது44) ஆகிய இருவருமே காயம் அடைந்துள்ளனர்.

காயமடைந்த இருவரையும் மொர வெவ பொலிஸார் மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதித்த நிலையில் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அழைத்து செல்லப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

காயமடைந்தவர்களின் மோட்டார் சைக்கிள் பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மாணிக்க கற்கள் அகன்ற நால்வர் பொலிஸாரால் கைதாகி பிணையில்!

(மஸ்கெலியா)

சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்ற நால்வரை மஸ்கெலியா பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரக்காடு கிராமத்தில் உள்ள அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவல்களைத் தொடர்ந்து அதிரடி படையினர் மற்றும் மஸ்கெலியா பொலிஸார் இனைந்து மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள புரவுன்ஷீக் தோட்ட பாளுகாமம் பிரிவில் மேற் கொண்ட சுற்றி வளைப்பின் போது சட்ட விரோதமாக மாணிக்க கற்கள் அகன்ற வேலையில் நால்வர் கைது செய்யப்பட்டனர்.

மாணிக்கக் கற்கள் அகழ்வுக்குப் பயன்படுத்திய உபகரணங்களையும் மீட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்ய பட்டவர்களில் இருவர் ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தபட்ட போது பதில் நீதிவான் பார்த்தீபனால் தலா 12 ஆயிரத்து 500 ரூபா வீதம் தண்ட பணம் கட்டுமாறு உத்தரவிடப்பட்டது.

ஏனைய இரண்டு பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டனர். எதிர்வரும் 17 ஆம் திகதி ஹட்டன் நீதிமன்றத்தில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது.



# சிவனொளிபாதமலைக்குச் செல்லும் உல்லாசப் பயணிகள் அதிகரிப்பு

(மஸ்கெலியா)

சிவனொளிபாதமலை பருவகாலம் தற்போது இடம்பெற்று வரும் நிலையில் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் சிவனொளிபாதமலைக்கு பெரும் எண்ணிக்கையில் வந்த வண்ணம் உள்ளனர்.

கடந்த சில நாள்களாக அதிக உல்லாச பயணிகள் நல்லதண்ணி நகரில் குவிந்த வண்ணம் உள்ளனர் என்று நல்லதண்ணி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சாந்த வீரசேகர தெரிவித்தார்.

எந்தக் காலமும் இல்லாத வகையில் இந்த முறை உலகின் பல பாகங்களிலும் இருந்து சிவனொளிபாதமலைக்கு தரிசனம் செய்ய உல்லாச பயணிகள் வருகை தருகின்றனர். இதன் காரணமாக நல்லதண்ணி நகரில் உள்ள அனைத்து விருந்தினர் விடுதிகளிலும் நிறைந்துள்ளன. அவர்களுக்கான முழுமையான பாதுகாப்பை நல்லதண்ணி பொலிஸார் வழங்கி வருகின்றனர் என்றும் அவர் கூறினார்.

அதேபோல் உள் நாட்டு யாத்திரிகர்கள் இந்த முறை சிவனொளிபாத மலைக்குத் தரிசனம் செய்ய ரயில் வழியாகவும் அரச பஸ்களிலும் வந்து தரிசனம் செய்கின்றனர்.

எதிர்வரும் மே மாதத்தில் வரும் பூரணை தினமான வைகாசி விசாகத்துடன் சிவனொளிபாதமலை பருவகாலம் நிறைவுக்கு வரவுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# தேர்தல்களைக் குறிவைத்து புதிய இடதுசாரிக் கூட்டணி

## விமல், டலஸ், ரொஷான், தயாசிறி ஓரணியில்

இடதுசாரிக் கூட்டணியொன்றை அமைப்பதற்கான முயற்சிகள் தெற்கு அரசியலில் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் அது தொடர்பில் மேலதிக சில தகவல்கள் வெளியாகியுள்ளன.

விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, உதய கம்மன்பில, கம்யூனிஸ் கட்சி பிரதிநிதிகள், டலஸ் அழகப்பெரும, ரொஷான் ரணசிங்க உள்ளிட்ட தரப்பினர் இணைந்தே இதற் கான முயற்சியில் இறங்கியுள்ளனர் எனவும், தயாசிறி ஜயசேகரவும் இதில் இணையவுள்ளார் எனவும் கூறப்படு கின்றது.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலை இலக்கு வைத்தே இந்தக் கூட்டணிக்கான ஏற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இடதுசாரிக் கூட்டணியாக மே தினத்தை நடத்துவது பற்றியும் கலந்து ரையாடப்பட்டு வருகின்றது. விமல் தரப்பின் மே தினக் கூட்டம் கிருலப்பனையில் நடைபெறவுள்ளது.



ஜனாதிபதித் தேர்தலில் நபர் ஒருவரை ஆதரிப்பதா அல்லது தமது அணியில் ஒருவரைக் களமிறக்குவதா என்பது பற்றி இன்னும் தீர்மா னிக்கப் படவில்லை. எனினும், விஜயதாஸ ராஜபக்ஷவை இடதுசாரிக் கூட்டணியில் களமிறக்கலாம் என்ற யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இது பற்றி உறுதியான தகவல் வெளியாகவில்லை.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### மேலும்...

ஐக்கிய மக்கள் சக்தி கூட்டணியில் இணைந்து புரிந்துணர்வு உடன்பாட்டிலும் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்நிலையிலேமே மேலும் இருவர் அப்பக்கம் செல்லவுள்ளனர்.

அதேவேளை, எந்தத் தரப்புடன் இணைவது என்பது தொடர்பில் டலஸ் அழகப்பெரும உட்பட ஏனைய சில உறுப் பினர்கள் இன்னும் முடிவெடுக்கவில்லை.

### புத்தாண்டில்...

இந்தக் கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண்டும்.

எங்களுடைய கட்சியின் யாப்பு ஒரு முறைப்படியான யாப்பு. அந்த யாப்பில் கடந்த காலங்களில் சில திருத்தங்கள் செய்திருந்தாலும் அந்தத் திருத்தங்கள் செய்யப்பட்ட அடிப்படையில் அதற்கான திருத்தப்பட்டயாப்புக்களும் இருக்கின்றன.

இவ்வாறு இருந்தும் பல விடயங்கள் அன்றைக்கு முறைப்படியாக நடைபெற வில்லை என்பது எனக்கும் தெரியும். இருந்தும் அவற்றையெல்லாம் பேசாமல் நான் மௌனம் காத்தமைக்கு ஒரே ஒரு காரணம் எப்படியாவது இந்தப் பொதுச் சபைக் கூட்டங்களை முடித்து தேசிய மாநாட்டை நடத்தியே ஆகவேண்டும் என்பதுதான். அதுதான் என்னுடைய சிந்தனையாகவும் இருந்தது.

அதனால்தான் நான் குறைகளைச் சொல்லவில்லை. கட்சிக்குள் உள்ள குறைபாடுகள் எனக்குத் தெரியும். ஆகவே, என்னைப் பொருத்தவரையில் நாங்கள் எல்லாவற்றையும் மறந்து குறிப்பாக பிரதேசவாதம், தனிப்பட்ட நபர், குற்றச்சாட்டுக்கள், வசைபாடுதல்கள் என சகலதையும் மறந்து முரண்பாடுகள் எதுவும் இல்லாமல் கட்சி என்ற ஒன்றை மையப்படுத்திச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இதனூடாக இந்த வழக்கிலிருந்து விடுவிக்கப்பட்டு கட்சியை இயங்கு நிலைக் குக் கொண்டு வர வேண்டும். ஏனென்றால் இப்போதைய நிலையில் தெற்கத்தேய சக்திகள் கூட எங்களுடைய பிளவுகளைச் சாதகமாகப் பயன்படுத்தி ஊடுருவக்கூடிய வாய்ப்புகளும் இருக்கின்றன. ஆகவே, அதையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டியது அவசியம்.

கட்சியின் பாரம்பரிய யாப்பில் சில பிழைகள் இருக்கத்தான் செய்கின்றன. அவை அனைத்தையும் புரிந்துகொண்டு தற்போதைய நிலைமையையும் புரிந்து கொண்டு செயற்பட வேண்டும். குறிப்பாக யாப்பில் சில பிழைகள் இருக்கின்றன. அவற்றை நாங்கள் பேசித் தீர்க்கலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது.

ஆகவே, நாங்கள் கூடிப் பேசுவோம். இப்போது கட்சியை நீதிமன்றத்திலே வைத்துக் கொண்டு கட்சியை நீதிமன்றம் கட்டுப்படுத்துகின்ற நிலைமை இருக் கின்றது. ஆகவே, அதிலிருந்து நாங்கள் விடுவித்துக் கொண்டு

கட்சியை முன்னோக்கிக் கொண்டு பயணிப்போம். எங்களுடைய கட்சி உறுப்பினர்கள் பேதங்களைத் தவிர்த்து பேதங்களை மறந்து ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

மேலும், எந்த இடையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்வதிலும் எங்களுடைய கட்சி சார்ந்த நபர்கள் பங்குபெறக் கூடாது. அதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்பதையும் நான் விநயமாகக் கேட்டுக் கொள்ள விரும்புகின்றேன்.

மேலும், பல்வேறு சந்தர்ப்பங்களில் நான் அவதானித்ததைப் பொறுத்தவரை எங்களுடைய உறுப்பினர்கள் ஒருவரை யொருவர் பரஸ்பர குற்றச்சாட்டுகளை முன் வைத்து முரண்பாடுகளை மேலும் வளர்க்கின்ற செயற்பாடுகளை நான் வேதனையுடன் பார்க்கின்றேன்.

இதில் கட்சி என்றால் எல்லோரும் சேர்ந்துதான் முடிவெடுக்க என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும். இதில் சுமந்திரன் வேறு சிறிதரன் வேறு என்று இல்லை. அவர்களைத் தனிநபர்களாக அல்லது ஒருவராக நானும் பார்க்க வில்லை. நீங்களும் பார்க்க வேண்டாம் ஆனாலும், ஒருவருக்கொருவர் குற்றச் சாட்டுகளை முன்வைத்துக்கொண்டு இருந்தால் தெற்கத்தேய எதிரிகளுக்கு வாய்ப்பாக இருக்கின்றது மட்டுமல்ல எங்களுக்குள்ளே இருக்கக்கூடிய முரண் பட்ட கட்சிக்காரர்கள் எல்லோருக்கும் ஒரு வாய்ப்பாக அமைந்துவிடும்.

மேலும் கட்சி ரீதியாக அல்லது தனிப் பட்ட ரீதியாக அல்லது வேறு ஒரு நபர் மீது ஆதரவாளர்கள் உங்களுடைய தனிப்பட்ட கருத்துக்களைப் பொதுவெளி யில் பகிர்வதைத் தவிர்த்துக்கொள் ளுங்கள். கட்சி நலனுக்காக முரண்பாடுக ளைக் கலைந்து ஒற்றுமையாக பயணிக்க வேண்டிய தேவை உள்ளதால் கட்சியை முன்னோக்கிக் கொண்டு செல்ல வேண் டும் என்ற கோரிக்கையும் உரிமையும் கவலையும் ஆதங்கமும் எனக்கு இருக் கின்றது.

ஆகையினால் முன்னர் இருந்ததைப் போன்று கட்சியை மீண்டும் முன்னோக்கி வளர்த்துக்கொண்டு சென்று அந்த நிலையை மீண்டும் நாட்ட வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் தற்போதைய நிலையில் மிக வும் கவலைக்குரிய விடயம் என்னவென் றால் ஒருவரையொருவர் பிரிந்து நின்று ஒருவரையொருவர் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துச் செயற்படுவது மிகவும் வேதனையானது.

இந்த இடத்தில் நான் இன்னும் ஒன் றையும் கூற இப்போது விரும்புகின்றேன். அதாவது கண்ட நிண்டவைகள் எல்லாம் அதாவது கட்சிக்கு உள்ளுக்குள் இருக் கின்றவர்களும் கட்சிக்கு வெளியில் இருக் கின்றவர்களும் எங்களுடைய கட்சி யாப்பைப் பற்றி கூறிக் கொண்டிருக் கின்றார்கள்.

ஆனால் ஒரு முறையான யாப்பு கட்சிக்கு இருக்கின்றது. அதன் மூலமாக 2008இல் மற்றும் 2010 இல் சில திருத் தங்கள் மேற்கொள்ளப்பட்டும் இருக்

(05ஆம் பக்கம் பார்க்க)

**புத்தாண்டில்...**

(04ஆம் பக்கத் தொடர்ச்சி)

கின்றன. அவ்வாறு திருத்தப்பட்ட அந்த யாப்புகள் என்னிடம் இருக்கின்றன. அதை நான் தலைவர் மாவையிடமும் கொடுத்திருக்கின்றேன்.

ஆனால், இந்த வழக்கில் உள்ளடக்கப்பட்ட யாப்பு கூட – திருத்தங்கள் உள்ளடக்கப்படாத யாப்புதான் நீதிமன்றத்திலும் உள்ளது. ஆனாலும், அதில் பாதிப்புகள் ஏற்படாமல் பார்த்துக்கொள்ளலாம். ஆனால், யாப்பை முழுமையாகப் பார்க்காதவர்கள், வாசிக்காதவர்கள், தெரியாதவர்கள் கடும் விமர்சனம் செய்து கொண்டிருக்கலாம்.

ஆனால், உண்மையாகவே பல சந்தர்ப்பங்களில் பல விடயங்களில் யாப்பு பின்பற்றப்படவில்லை என்பது உண்மை. ஆகவே, அந்த விடயங்களிலே சரி செய்து கொண்டு அனைத்தையும் முழுமையாக உள்ளடக்க வேண்டும்.

அவ்வாறு செய்யப்பட்ட யாப்பு இருக்கின்றது. ஆனால், இதில் புதிய யாப்பு, பழைய யாப்பு என்று குழம்பிய தேவையற்ற சூழ்நிலையால் நாங்கள் இன்று நடுதெருவில் நிற்கின்றோம். ஆகவே, தவறுகள் இருக்கின்றன. அதைச் சீர்செய்யலாம். அவ்வாறு திருத்திய சரியான யாப்பு என்னிடம் இருக்கின்றது. அதன்படி செயற்பட்டால் எந்தப் பிரச்சினையும் இல்லை. விளக்கங்கள் இருந்தால் நாங்கள் விளக்கலாம் அல்லது விவாதிக்கலாம்.

எனவே, விமர்சிப்பதைத் தவிர்த்துக் கொண்டு பிறக்கின்ற சித்திரைப் புத்தாண்டில் இருந்தாவது பேதங்களைக் களைந்து நபர்களாகவோ, கூட்டாகவோ, அணிகளாகவோ நின்று பேசுவதைத் தவிர்த்துக் குறிப்பாக அணிகள் என்ற நிலையைத் தவிர்த்து கட்சி என்ற ஒரு பொதுச் சிந்தனையில் வந்து ஒற்றுமையாக ஒரே கட்சியாகச் செயற்படுவோம் என்று எங்களது கட்சி உறுப்பினர்கள் சபதம் எடுக்க வேண்டும். அதற்கான செயற்பாடுகளில் யாவரும் ஈடுபட வேண்டும் என்றும் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றேன்."
– என்றார்.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## பயனற்ற ஒழுங்கு நடவடிக்கை

'குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய கதை' கேள்விப்பட்டிருக்கின்றோம். அத்தகைய ஒரு நடவடிக்கையை எடுக்க முயற்சித்திருக்கின்றது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன என்ற மொட்டுக் கட்சி.

அந்தக் கட்சியின் சார்பில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி, இப்போது எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஐக்கிய மக்கள் சக்தியுடன் அரசியல் உடன்படிக்கை ஒன்றைச் செய்திருக்கும் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் உட்பட்ட அணியினருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் போவதாக மொட்டுக் கட்சி அறிவித்திருக்கின்றது. இது குதிரை ஓடிய பின்னர் லாயத்தை மூடிய வேலையை ஒத்ததுதான்.

மொட்டுக் கட்சியிலிருந்து பிரிந்து தங்களை சுதந்திர மக்கள் காங்கிரஸ் என்ற குழு என அழைத்துக்கொண்ட பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், டிலான் பெரேரா, கலாநிதி நாலக கொடஹேவா, கே.பி.குமாரசிறி, கலாநிதி உபுல் கலபதி, வஸந்த யாப்பா பண்டார ஆகிய அறுவருமே சஜித் பிரேமதாஸவுடன் உடன்பாடு செய்திருக்கின்றனர்.

ஒரு கட்சியின் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவானவர் அக்கட்சியின் அனுமதியின்றி, அதன் முடிவுக்கு மாறாக, மாற்றுக் கட்சி ஒன்றுடன் அரசியல் உடன்படிக்கை செய்து, அரசியல் பயணம் ஒன்றை தொடர முன் வந்தால் அந்த உறுப்பினருக்கு எதிராக அவரது சொந்தக் கட்சி ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கு அவ் விடயத்தில் வலிமையான - போதுமான - காரணங்கள் உண்டு. எனினும் அந்த ஒழுங்கு நடவடிக்கை மூலம் மொட்டுக் கட்சி சாதிக்கக் கூடியது யாது என்பதுதான் கேள்வி.

இப்படி ஒழுங்கு நடவடிக்கை எடுத்து பேராசிரியர் பீரிஸையும் ஏனைய ஐவரையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து விலக்கச் செய்வதற்கு மொட்டுக் கட்சிக்கு இனிக் கால அவகாசம் உண்டா என்பதுதான் விவகாரம்.

முதலில் சம்பந்தப்பட்ட எம்.பிக்களிடம் அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படக் கூடாது என்பதற்கான காரணத்தை - விளக்கத்தை - போதிய கால அவகாசம் வழங்கிக் கோர வேண்டும்.

அதன் பின்னர் அந்த விடயம் தொடர்பில் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும்.

அந்த விசாரணையின் அடிப்படையில் அந்த எம்.பியைக் கட்சியிலிருந்து விலக்குவது மற்றும் அதன் மூலம் அவரை எம்.பி. பதவியை இழக்கச் செய்வதான முடிவுகளை எடுத்து அதை அவருக்கு அவருக்கும், தேர்தல் ஆணையத்துக்கும், நாடாளுமன்ற செயலாளர்நாயகத்துக்கும் அறிவிக்க வேண்டும்.

கட்சியின் அந்த முடிவை ஆட்சேபித்து அடுத்த ஒரு மாதத்துக்குள் சம்பந்தப்பட்ட எம்.பி. நீதிமன்றுக்கு முறைப்பாடு செய்தால், அந்த வழக்கு விசாரணை முடியும் வரைக் காத்திருக்க வேண்டும்.

இத்தகைய வழக்குகள் இப்போது தேங்கிக் கிடக்கும் நிலைமை மற்றும் வழக்குகளின் பொதுவான எண்ணிக்கை, தாமதம் போன்றவற்றைக் கவனத்தில் எடுத்தால் இத்தகைய வழக்குகளை விசாரணைக்கு ஏற்று, தரப்புகளுக்கு அழைப்பாணை அனுப்பவே மாதக்கணக்கில் பிடிக்கும் என்பது தெளிவாகும்.

அதன் பின்னர், இந்த வழக்குகள் விசாரிக்கப்பட்டு, முடிவெடுக்கப்படும் போது இந்த நாடாளுமன்றத்தின் பதவிக் காலம் முடிந்து, அடுத்த நாடாளுமன்றத்தின் பதவிக்காலம் கணிசமாகக் கடந்திருக்கும்.

இந்த நாடாளுமன்றத்திற்கு இன்னும் 16 மாதங்களே பதவிக்காலம் உள்ளது. அதற்கு முன்னரே, வரும் ஜனாதிபதி தேர்தல் முடிவடைந்தவுடன் புதிய ஜனாதிபதி இந்த நாடாளுமன்றத்தைக் கலைத்துத் தேர்தலுக்கு உத்தரவிடுவார் என்ற கருத்து பெரும்பாலும் நிலவுகின்றது.

இந்தப் பின்புலத்தில், இப்போது எம்.பி. ஒருவருக்கு எதிராக ஒரு கட்சி புதிதாக நடவடிக்கையை ஆரம்பித்து, தொடர்ந்து முன்னெடுத்து, இந்த நாடாளுமன்றத்தின் காலத்தில் அவரைப் பதவி இழக்கச் செய்யும் ஏற்பாட்டை பூர்த்தி செய்வது என்பது இலகுவில் சாத்தியப்படக்கூடிய விடயம் அல்ல.

பேராசிரியர் பீரிஸ் தேர்தலிலேயே நிற்காமல் மொட்டுக் கட்சி சார்பில் தேசியப் பட்டியல் எம்.பியானவர். ஆயினும் அவர்தான் மொட்டுக் கட்சியின் ஸ்தாபகச் செயலாளர். ராஜபக்ஷக்களும் அவரது ஆதரவாளர்களும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கீழ் சுதந்திரக் கட்சி எம்.பிக்களாக வாலைச்சுருட்டிக் கொண்டிருந்த போது, தாங்கள் எம்.பிக்களாக இல்லாதமையால், வெளியே நின்று, துணிச்சலுடன் மொட்டுக் கட்சிக்கு உருக் கொடுத்தவர்கள் இருவர். ஒருவர் பேராசிரியர் பீரிஸ். மற்றவர் பஸில் ராஜபக்ஷ.

ஆக, மொட்டுக் கட்சியின் ஸ்தாபகரான பீரிஸ் மீதே அக்கட்சியின் ஒழுங்கு நடவடிக்கை பாய்கின்றது. அதுதான் அரசியல்!






# கல்லடி ஹரி இல்லத்தின் மாணவன் கௌரவிப்பு!

(பழுவூரான்)

கல்லடி ஹரி இல்லத்தில் தரம் இரண்டில் இணைந்து மட்டக்களப்பு சிவானந்தா வித்யாலயத்தில் கல்வி கற்று களனி பல்கலைக்கழகத்தில் மென்பொறியியல் துறையில் பட்டப்படிப்பை பூர்த்தி செய்த வாகரை கதிரவெளியையைச் சேர்ந்த ஞானசேகரன் மங்களன் உதவும் கரங்கள் அமைப்பினரால் ஹரி இல்லத்தில் இடம்பெற்ற நிகழ்வில் கௌரவிக்கப்பட்டார்.

ஹரி இல்லத் தலைவரும் சமூக சேவையாளருமான ச. சந்திரகுமாரின் தலைமைமையில் நடை பெற்ற பாராட்டு நிகழ்வில், உதவும் கரங்கள் நிறுவனத் தலைவரும், சிரேஷ்ட விரிவுரையாளருமான ச.ஜெயராஜா பிரதம அதிதியாகவும், ஏறாவூர்ப்பற்றுக் கோட்டக்கல்வி அதிகாரி த. ராஜ்மோகன், சைவ மங்கையர் மன்ற தலைவியும் ஓய்வு பெற்று அதிபருமான திருமதி திலகவதி ஹரிதாஸ், கல்லடி பேச்சியம்மன் ஆலய முகாமையாளர் ந.ஹரிதாஸ் ஆகியோர் சிறப்பு அதிதிகளாகவும், உதவும் கரங்கள் அமைப்பின் முகாமையாளர் புவிராஜன் கௌரவ அதிதி யாகவும் கலந்து கொண்டனர்.





# விழிப்புலனற்றோருக்கான வாழ்வாதார உதவித் திட்டம்

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

உதயம் விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஊடாக விழிப்புலனற்றோருக்கு சித்திரை வருடப் பிறப்பை முன்னிட்டு வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வு உதயம் விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் பி.டிசாந்தன் தலைமையில் சங்க வளாகத்தில் இடம் பெற்றது.

நிகழ்வில் பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் திருமதி ஜஸ்டினா முரளிதரன் கலந்து கொண்டார்.

சித்திரை விருடப் பிறப்பை முன்னிட்டு விழிப்புலனற்றோரும் இந்த வருடப் பிறப்பை மகிழ்வாக கொண்டாடுவதற்கு புத்தாடைகள் மற்றும் உலர் உணவுப் பொருள்களைப் பிரித்தானிய வோள்தஸ்ரோ கற்பக விநாயகர் ஆலயத்தின் நிதி உதவியின் கீழ் வழங்கப்பட்டது. இத்திட்ட முகாமைத்துவத்தை இலங்கை அகிலன் பவுண்டேசன் நிறுவனம் மேற்கொண்டது.

இந்த நிகழ்வில் விழிப்புலனற்றோர், தமது வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் அபிவிருத்தி செய்வதற்கும் காணி ஒன்றினை வழங்குமாறு அரச அதிபரிடம் கோரிக்கை முன்வைத்தனர்.







# பல வாகனங்கள் மோதியதில் மருதமுனையில் பாரிய விபத்து

(எம்.எம்.றம்ஸீன், பாறுக் ஷிஹான்)

மருதமுனை பிரதான வீதியில் நேற்று மாலை கார், மோட்டார் சைக்கிள், ஓட்டோ, பஸ் என்பன ஒன்றுடன் ஒன்று மோதியதில் பாரிய விபத்து ஏற்பட்டது. இதில் சிலர் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

நேற்று மாலை மட்டக்களப்பில் இருந்து நிந்தவூர் பிரதேசத்தை நோக்கி சென்று கொண்டிருந்த கார் மருதமுனை பிரதான வீதியில் திரும்ப எத்தனித்த போது, அந்த வீதியில் சென்று கொண்டிருந்த ஸ்கூட்டர், மோட்டார் சைக்கிள், ஓட்டோ, பஸ் என்பன ஒன்றுடன் ஒன்று மோதி இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிள், ஓட்டோவில் வந்தவர்கள் விபத்தில் காயமடைந்து வைத்திசாலையில் சேர்க்கப்பட்டனர். விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பெரியநீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது, சீரற்ற காலநிலை நிலவுவதால் வீதிகளை பயன்படுத்தும் பொதுமக்கள் மற்றும் சாரதிகள் அவதானத்துடன் செயல்படுமாறு பொலிஸார் கேட்டுள்ளனர்.









# அறிவுச்சுடர் போட்டியில் வென்ற மாணவர்களுக்குக் கௌரவிப்பு!

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

இலங்கை ஒளிபரப்பு கூட்டுத்தாபனம் நாடளாவிய ரீதியில் நடத்திய அறிவுச் சுடர் போட்டி நிகழ்ச்சி அண்மையில் கொழும்பில் இடம் பெற்றது.

இந்தப் போட்டியில் காத்தான்குடி மத்திய கல்லூரி சார்பாக பங்கு பற்றி தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்ட மாணவர்களான எவ்.ஆர். எம். முன்ஷிப், எம்.ஆர்எம்.உஷாமா நுஷைத், எம்.ஜே.எம்.ஷாபிர் ஆகியோர் ஒக்ஸி காடன் சுற்றுச்சூழல் பசுமைக் கழகத்தால் பாராட்டிக் கௌரவிக்கப் பட்டனர்.

புனித நோன்புப் பெருநாள் தினத் தன்று ஒக்ஸி காடன் சுற்றுச்சூழல் பசுமை கழகத்தினர் காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்மா பள்ளிவாசல் வளாகத்தில் நடத்திய ஈத் வசந்தம் நிகழ்ச்சியின் போது பாராட்டி கௌரவிக்கப்பட்டனர்.



ஒக்ஸி காடன் சுற்றுச்சூழல் பசுமை கழகத்தின் தலைவர் எம். ஐ. எம். கமால்தீனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் காத்தான்குடி முதலாம் குறிச்சி மீரா பெரிய ஜும்ஆ பள்ளி வாசலின் உப தலைவர்களான கே. ஏ. றஹீம், எம். அபுல்ஹஸன் மற்றும் பீ. எம். றமீஸ் உட்பட நிர்வாகிகள், சட்டத்தரணி ஆர்.எம்.றுஸ்வின் மற்றும் ஊர் பிரமுகர்கள், சிறுவர்கள், பெற் றோர்கள் என பலரும் கலந்து கொண் டனர்.

# இஸ்ரேலிய பொருள்களையும் உற்பத்திகளையும் நிராகரித்துப் பாலஸ்தீனத்தைப் பலப்படுத்துவோம்!

## கலிலூர் ரஹ்மான் கோரிக்கை

(நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான்)

இஸ்ரேலின் தாக்குதலில் உயிரிழந்த பாலஸ்தீனியர்களுக்காக வெள்ளிக் கிழமைகளில் ஜும்ஆ தொழுகைக்குப் பின் ஜனாஸா தொழுவதற்கு உலமாக் கள், சமூக தலைவர்கள் முன்வரவேண் டும். அத்துடன் பாலஸ்தீன மக்களை பலப்படுத்த முற்போக்கு சிந்தனை கொண்ட இலங்கை மக்கள் அனைத்து இஸ்ரேலிய பொருள்களையும் புறக் கணித்து, அவர்களின் உற்பத்திகளையும் நிராகரிக்க வேண்டும்.

பாலஸ்தீன மக்களைத் தினமும் கொல்லும் இஸ்ரேலைப் பொருளாதார ரீதியாக வீழ்த்த முன்வருமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கொழும்பு மாநகர சபை முன்னாள் உறுப்பினரும், ஜனாதிபதி செயலணி முன்னாள் உறுப்பினருமான ஐ.ஏ. கலிலூர் ரஹ்மான் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.



இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப் பட்டுள்ளது. அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு,

பாலஸ்தீன காஸா பகுதியில் ஜன நாயக முறைப்படி நடந்த தேர்தலில் காஸா மக்களின் வாக்குகளால் ஜனநாய கம் வெற்றி பெற்றதால் இப்போது இஸ்ரேல் இராணுவம் பாலஸ்தீனத்தை சேர்ந்த காஸா மக்கள் மீது உச்சக்கட்ட அத்துமீறலை மேற்கொண்டு ஈவிரக்க மின்றி தாக்குதல் நடத்தி அப்பாவி மக்களை கொல்கின்றனர்.

காஸாவில் உள்ள பாலஸ்தீன மக் களை படுகொலை செய்வதை நிறுத்தாத இஸ்ரேல், தற்போது காஸா மக்களை ஜனநாயக ரீதியில் வழிநடத்தி வரும் பாலஸ்தீன ஜனநாயக ஹமாஸ் அமைப் பின் அரசியல் பிரிவு தலைவர் இஸ் மாயில் ஹனியாவின் குடும்ப உறுப்பினர் களை குறிவைத்து பாரிய படுகொலை நடவடிக்கையை முன்னெடுத்துள்ளது.

அந்தக் கொலைகளால், புனித ரமழான் பெருநாள் பண்டிகையின் போது இஸ்மாயில் ஹனியாவின் மகன், மூன்று மகள்கள், பேரக்குழந்தைகள் மற்றும் ஏழு கொள்ளுப் பேரக்குழந்தைகள் கொல்லப்பட்டுள்ளனர். அதற்காக அவருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இஸ்மாயில் ஹனியா உள்ளிட்ட பாலஸ்தீன மக்கள் தமது குடும்ப உறுப் பினர்களையோ அல்லது பாலஸ்தீன மக்களையோ இஸ்ரேல் கொன்றுவிட்டு ஜனநாயக பாலஸ்தீன நிலத்தை கைகப் படுத்த முடியாது என்பதை தமது மனவலி மையால் உணர்த்தியுள்ளனர்.-என்றுள்ளது.




# இன்பத்தைச் சித்திரையாள் எப்படியும் கொடுப்பாள்...!

தைமகள் வந்தாள் தளர்வகற்றி நின்றாள்
வழிகாட்டி எம்மை வழிநடத்தி நின்றாள்
புத்துணர்வு தந்தாள் புதுமுயற்சி தொடங்க
கைப்பிடித்து எம்மை கனிவுடனே அணைத்தாள்

அவளணைப்பில் இருக்க சித்திரையாள் வந்தாள்
சீர்கொண்டு சிறப்போடு சிரித்தபடி வந்தாள்
ஆனந்தம் தருவாள் அகமகிழ வைப்பாள்
அவளோடு கைகோர்த்து அனைவருமே மகிழ்வோம்

சித்திரை என்பதே சிறப்பான மாதம்
எத்தனையோ எதிர்பார்ப்பை நிறைவேற்றும் மாதம்
கல்யாணப் பத்திரிகை காத்திருக்கும் மாதம்
கலகலப்பு எங்கணுமே காலூன்றும் மாதம்

மருத்துநீர் என்பது மருந்து நீராகும்
உடலுளத்தைச் சீராக்கும் உயர்ந்த நீராகும்
சித்திரையில் சிறப்பாக இணையும் நீராகும்
அத்தனையும் முன்னோரின் அறிவியலே ஆகும்

புத்தாடை பட்டாசு சித்திரையில் இருக்கும்
புறப்பட்டு உறவெல்லாம் விருந்தாக வருவார்
உணர்வோடு உறவுகள் சங்கமிக்கும் வேளை
உயர்வாகச் சித்திரையும் எழுந்துமே நிற்கும்

ஊரிருக்கும் கோவிலெல்லாம் உற்சவம் நடக்கும்
உறவோடு குடும்பமெலாம் வழிபட்டு நிற்பார்
ஆலயத்தில் அரன்நாமம் அனைவருமே சொல்லி
ஆனந்தம் அமைதிபெற அடிபரவி நிற்பார்

சித்திரையில் தித்திப்பு இல்லமெலாம் இருக்கும்
எத்தனையோ பலகாரம் எங்குமே நிறையும்
பக்கத்து வீட்டார்க்கு பகிர்ந்துமே கொடுத்து
பகிர்ந்துண்ணும் பண்பினை காட்டுமே சித்திரை

விதம்விதமாய் கலைவிழாக்கள் சித்திரையில் நடக்கும்
விளம்பரமே இல்லாமல் விருந்தோம்பல் நடக்கும்
இருப்போர்கள் இல்லாதார் இல்லங்கள் தோறும்
இன்பத்தைச் சித்திரையாள் எப்படியும் கொடுப்பாள்



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா,
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்,
மெல்பேன், ஆஸ்திரேலியா.



# தென் எருவில்பற்று விளையாட்டு விழா

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகமானது, கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்களம் மற்றும் செட்டிபாளையம் நியூட்டன் விளையாட்டு கழகம், கிராம ஆலயங்கள், பொது அமைப்புகளுடன் இணைந்து ஏற்பாடு செய்த பிரதேச மட்ட விளையாட்டு நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் செட்டிபாளையம் கண்ணகி அம்மன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் முதன்மை அதிதியாக மாவட்ட செயலாளர் திருமதி ஜஸ்டினா முரளிதரனும், சிறப்பு அதிதியாக கிழக்கு மாகாண விளையாட்டு திணைக்கள மாகாண பணிப் பாளர் உதயகுமார் சிவராசாவும் கலந்து கொண்டனர்.

இதன் போது பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டு கழகங்களுக்கிடையில் இடம்பெற்ற மைதான மற்றும் குழுநிலை போட்டிகளின் இறுதிப் போட்டி நிகழ்வுகளும், வெற்றியீட்டியோருக்கான சான்றிதழ், வெற்றிக் கிண்ணம் வழங்கலும் இடம்பெற்றன.

பிரதேச மட்ட விளையாட்டு நிகழ்வில் களுதாவளை கெனடி விளையாட்டு கழகம் முதலாம் இடத்தையும், செட்டிபாளையம் நீயூட்டன் விளையாட்டு கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இந்த நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதேச செயலக பதவி நிலை உத்தியோகத்தர்கள், பிரதேச சபை செயலாளர் சா. அறிவழகன், செட்டிபாளைய கிராம ஆலய மற்றும் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள், அலுவலக உத்தியோகத்தர்கள் , பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.






# நிரந்தரப் பொது மயானம் இல்லாத மன்னார் கிராமம்!

மன்னார் மாவட்டத்தின் மன்னார் பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள நாகதாழ்வு கிராமத்தில் பொது மயானம் இன்மையால் அங்குள்ள மக்கள் பெரும் துயரங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

யுத்த காலத்துக்கு முன்னர் இந்தக் கிராம மக்கள் பயன்படுத்தி வந்த பொது மயானம் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதன் காரணமாக இந்தக் கிராம மக்கள் பொது மயானம் இன்றி ஆங்காங்கே சில இடங்களில் மரணிப்பவர்களின் இறுதிக் கிரியைகளை செய்து வருகின்றனர்.

தமக்கு நிரந்தரமான ஒரு பொது மயானத்தை வழங்குமாறும் தாம் ஆங்காங்கே தகன கிரியை செய்ய முடியாது என்றும் நிரந்தரமான இடம் கிடைக்கும் பட்சத்தில் தகனக் கிரியை செய்வதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் தெரிவித்திருந்தனர்.



# போக்கட்டி அ.த.கவில் செயற்பட்டு மகிழ்வோம்!

**(த.சுபேசன்)**

சாவகச்சேரி போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 2024 ஆம் ஆண்டுக்கான செயற்பட்டு மகிழ்வோம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை பாடசாலை முதல்வர் தி.அபராஜிதன் தலைமையில் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

# போசாக்கற்ற நிலைமை இலங்கையில் அதிகரிப்பு

**(த.சுபேசன்)**

இலங்கையில் போசாக்கற்ற நிலைமை அதிகரித்து வருகிறது. அதன் காரணமாகப் போசாக்கற்ற குழந்தைகளின் பிறப்பு விகிதம் அதிகரித்துள்ளது என்று வடக்கு – கிழக்கு பெண்கள் கூட்டு அமைப்பு சுட்டிக் காட்டியுள்ளது.

அரிசியின் விலையை நூறு ரூபாவுக்குக் குறைக்க வேண்டும் என வலியுறுத்தி சாவகச்சேரி நகரில் முன்னெடுத்த கவனவீர்ப்புப் போராட்டத்தின் பின்னர் ஊடகங்கள் முன்னிலையில் அறிக்கை வெளியிட்ட போதே அவர்கள் இதனைச் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் தமது அறிக்கையில் தெரிவித்துள்ளவை வருமாறு,

ஒட்டுமொத்த இலங்கை மக்களதும் அடிப்படை உணவு அரிசிச் சோறு ஆகும். அந்த வகையில் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியும், பொருள்களின் விலையேற்றமும் கிராம மட்டங்களில் உள்ள வறிய மற்றும் நடுத்தர குடும்பங்களில் பாரிய போசாக்குக் குறைபாடுகளை ஏற்படுத்தியுள்ளது.

பல மக்கள் தொழிலை இழந்துள்ளனர். இந்த நிலையில் அரிசியின் விலையேற்றம் காரணமாகச் சில குடும்பங்கள் மூன்று வேளை உணவுக்குப் பதிலாக ஒன்று அல்லது இரண்டு வேளை உணவை மாத்திரமே உட்கொண்டு வருகின்றனர்.

சில குடும்பங்கள் கஞ்சி காய்ச்சிக் குடிக்கும் நிலைமைக்குள் தள்ளப்பட்டுள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட யுத்தம், கொவிட் தாக்கம், வெள்ள அனர்த்தம், வறட்சி, பொருளாதார நெருக்கடி ஆகியன வறிய மக்கள் மத்தியில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.

சிறுவர்கள், பெண்கள், கர்ப்பிணிகள் என அனைவருமே போசாக்கற்ற உணவுகளை உள்ளெடுக்க வேண்டிய நிலை காணப்படுகிறது. இதனால் போசாக்கற்ற குழந்தைகள் பிறக்கும் விகிதம் அதிகரித்துக் காணப்படுகின்றது. அவர்கள் இலகுவில் நோய் வாய்ப்படுகின்றனர்.

எனவே இலங்கை அரசு மக்களின் சோற்றில் கை வைக்காமல் மக்களின் வேண்டுகோளையும் பசியின் கொடூர நிலையையும் உணர்ந்து நாட்டில் அரிசியின் விலையை நூறு ரூபாவுக்குக் கீழ் உடனடியாக குறைக்க முன்வர வேண்டும்.– என்றுள்ளது.

# தினகரன் வெற்றிபெற்றால் தமிழகத்தின் அரசியல் மாறும்

## தேனியில் அண்ணாமலை உரை



“ஸ்டாலின், இ.பி.எஸ். இருவருக்கும் டி.டி.வி.தினகரனை பிடிக்காது. காரணம், அவர் வெற்றிபெற்றுவிட்டால் தமிழகத்தின் அரசியல் மாறும் என்பது இருவருக்கும் தெரியும். ஜூன் 4 ஆம் திகதி டிடிவி.தினகரன் வெற்றிபெற்ற பின்னர் உண்மையான மக்களை சார்ந்த அரசியல் நடக்கும்.”

– இவ்வாறு பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

தேனி தொகுதியில் அம்மா மக்கள் முன்னேற்ற கழகம் சார்பில் போட்டியிடும் டி.டி.வி. தினகரனை ஆதரித்து பா.ஜ.க .மாநிலத் தலைவர் அண்ணாமலை பிரச்சாரம் செய்தார். இதன்போது அவர் உரையாற்றுகையில்,

“அண்ணாமலையும், டி.டி.வி. தினகரனும் ஏன் ஒன்றிணைந்துள்ளோம் என்றால், தமிழகத்தின் அரசியல் மாறிக்கொண்டிருக்கிறது. 2026 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்துக்கான அடித்தளம் தான் தற்போது நடக்கும் மக்களவை தேர்தல். 400 இடங்களை பெற்று மோடி தலைமையில் ஆட்சி அமைய வேண்டும், அதில் முதன்மை உறுப்பினராக தேனியின் குரலாக தானும் இருக்க வேண்டும் என்று டி.டி.வி. தினகரன் தேர்தலில் போட்டியிடுகிறார்.

இந்தியாவை காப்பாற்ற வேண்டும் என்று முதல்வர் ஸ்டாலின் சொல்கிறார். தமிழகத்தை முதலில் ஸ்டாலினிடம் இருந்து காப்பாற்ற வேண்டும். தமிழகத்தை கோபாலபுரம் குடும்பத்திடம் இருந்து காப்பாற்ற வேண்டும். 33 மாதங்களாக அவர்கள் கொள்ளையடித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் இருந்து தமிழகத்தை காப்பாற்ற வேண்டும் என்பதற்காக இந்தக் கூட்டணி அமைந்துள்ளது.

தேனியில் டி.டி.வி.தினகரன், ராமநாதபுரத்தில் ஓ.பி.எஸ். என அனைத்து இடங்களிலும் கூட்டணியின் மூத்த தலைவர்கள் களத்தில் இறங்கியுள்ளனர். டி.டி.வி. தினகரன் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்ற அவசியம் இல்லை. கட்சியில் இருந்து வேறு யாரவது ஒருவரை நிறுத்தியிருக்கலாம். ஏன், அவரே களத்தில் இறங்கியுள்ளார் என்றால், மோடி மீண்டும் ஆட்சியமைக்க வேண்டும், தமிழகத்தில் ஒரு புதிய அரசியலை மக்களுக்கு காட்ட வேண்டும் என்பதற்காக தான்.

ஒரு பக்கம் ஸ்டாலினின் தி.மு.க, மறுபக்கம் எடப்பாடி பழனிசாமி தலைமையிலான அ.தி.மு.க. இருகட்சிகளும் பெயரில் தான் வேறு. மற்ற செயல்களில் அனைத்தும் ஒன்றுதான். இருகட்சிகளும் சேர்ந்து டி.டி.வி.தினகரனை தோற்கடிக்க முயல்கிறார்கள். ஆனால் மக்கள் அவர்கள் பக்கம் இல்லை. அ.தி.மு.க. தொண்டர்கள் வாக்கும் டி.டி.வி. தினகரனுக்கு தான். அ.தி.மு.க. தொண்டர்கள் அ.ம.மு.கவுடன் இணைய போகிறார்கள். அவர்களை வழிநடத்தக் கூடிய உண்மையான தலைவன் யார் என்பது அ.தி.மு.க. தொண்டர்களுக்கு தெள்ளத் தெளிவாக தெரியும்.

பூச்சாண்டிகளையும், போலித் தலைவர்களையும் எந்த தொண்டனும் கண்டுபிடித்து விடுவான். அப்படிபட்ட தலைவர்கள் தான் இப்போது தேர்தலில் ஒன்று சேர்ந்து உள்ளார்கள். ஸ்டாலின், இ.பி.எஸ். இருவருக்கும் டி.டி.வி .தினகரனை பிடிக்காது. காரணம், அவர் வெற்றிபெற்றுவிட்டால் தமிழகத்தின் அரசியல் மாறும் என்பது இருவருக்கும் தெரியும். ஜூன் 4 ஆம் திகதி டி.டி.வி. தினகரன் வெற்றிபெற்ற பிறகு உண்மையான மக்களை சார்ந்த அரசியல் நடக்கும். அதனால், தான் இருவரும் இணைந்து இவரை தோற்கடிக்க கங்கனம் கட்டிக்கொண்டு தேனியில் பேசிவிட்டு சென்றுள்ளனர் .” – என்றார்.

# பொன். ராதாகிருஷ்ணனை ஆதரித்து அமித் ஷா பிரச்சாரம்

மக்களவை தேர்தல் தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெறவுள்ள நிலையில், கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் மத்திய அமைச்சர் அமித் ஷா வீதி ஊர்வல பிரச்சாரம் மேற்கொண்டார்.

கன்னியாகுமரி மக்களவை தொகுதி பா.ஜ.க. வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ணனை ஆதரித்து அமித்ஷா வீதி ஊர்வலம் சென்றபோது பா.ஜ.க. தொண்டர்கள் அவருக்கு உற்சாக வரவேற்பு வழங்கினார்.

மக்களவை தேர்தல் தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்கான தேர்தல் பிரசாரத்தை அரசியல் கட்சிகள் தீவிரப்படுத்தியுள்ளன. தமிழக அரசியல் தலைவர்களின் பிரசாரத்துக்கு மத்தியில் தேசிய தலைவர்களும் தீவிர சுற்றுப்பயணம் செய்து பிரசாரத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்த நிலையில், பா.ஜ.க. தேசிய தலைவர்கள் மோடி, அமித் ஷா ஆகியோர் தமிழகத்தில் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் தொடர்ச்சியாக, கன்னியாகுமரி மாவட்டம் தக்கலையில் மத்திய அமைச்சர் அமித்ஷா வீதி ஊர்வல பிரச்சாரம் மேற்கொண்டார்.

கன்னியாகுமரி பா.ஜ.க. வேட்பாளர் பொன். ராதாகிருஷ்ண



னுக்கு ஆதரவாக வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். தக்கலை பழைய பஸ் நிலைய சந்திப்பு முதல் மேட்டுக்கடை வரை வீதி ஊர்வல பிரச்சாரம் மேற்கொண்டார்.

அமைச்சர் அமித் ஷா இது குறித்து தனது எக்ஸ் பக்கத்தில், “கன்னியாகுமரி சாலைப் பேரணியில், பிரதமர் மோடி அவர்களின் மீது மக்கள் கொண்டுள்ள பேரன்பின் எழுச்சியை நேரலையில் பாருங்கள்” எனப் பதிவிட்டுள்ளார்.

கன்னியாகுமரியில் காங்கிரஸ், அ.தி.மு.க., பா.ஜ.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த விஜய் வசந்த், நசரத் பாசிலியன், பொன். ராதாகிருஷ்ணன் ஆகியோர் களத்தில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.




# காசாவில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 05 பேர் உயிரிழப்பு

காசாவின் மத்தியப் பகுதியில் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதலில் 05 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

மேலும், அந்த தாக்குதலில் 30 பேர் காயமடைந்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

மேற்படி பகுதியில் குடியிருப்புகள், வைத்தியசாலைகள் மற்றும் பொது இடங்கள் மீதும் இஸ்ரேல் தாக்குதல்களை முன்னெடுத்துள்ளது.

பாலஸ்தீன அகதிகளுக்கான உதவிகளை அனுமதிக்கு மாறு ஐக்கிய நாடுகள் சபை இஸ்ரேலுக்கு அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.




# உக்ரைனின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையத்தை தாக்கி அழித்தது ரஷ்யா

உக்ரைனின் தலைநகர் கீவ், செர்காசி, ஜைடோமிர் மாகாணங்களுக்கு மின்சாரம் வழங்கி வந்த டிரைபில்ஸ்கா என்ற மிகப்பெரிய மின்சார உற்பத்தி நிலையத்தை ரஷ்யா தாக்குதல் நடத்தி அழித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மின்சார உற்பத்தி நிலையம் எரிந்து ஒரு குறிப்பிட்ட தூரம் வரை புகை மூட்டமாக காட்சி அளித்ததாகவும் ஆலையை நிர்வகிக்கும் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவில் உள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் மீது உக்ரைன் நடத்திய தாக்குதல்களுக்கு பதிலடியாகவே உக்ரைனின் கட்டமைப்புகள் மீது தாக்குதல் நடத்தப்பட்டதாக மொஸ்கோ தெரிவித்துள்ளது.

டிரைபில்ஸ்கா உற்பத்தி நிலையம் சுமார் 3 மில்லியன் நுகர்வோருக்கு மின்சாரம் வழங்கி வந்த நிலையில் இந்த வருடத்தில் இப்போது இதன் தேவை சற்று குறைவாக இருப்பதால் இந்தத் தாக்குதல் மிகப்பெரிய பாதிப்பினை ஏற்படுத்தாது எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஆனால், வரவிருக்கும் கோடைக் காலத்தின்போது காற்றுச்சீராக்கி அதிகளவில் பயன்படுத்தப்படும் என்பதால் அதிக மின்சார தேவை ஏற்படும். அப்போது பிரச்சனை ஏற்பட வாய்ப்புள்ளதாக தெரிகிறது.

கார்கிவில் உள்ள எரிபொருள் கட்டமைப்பு மீது 10 இற்கும் மேற்பட்ட தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இந்த மாகாணத்தில் 2 லட்சம் மக்களுக்கு மேல் வசித்து வருவதனால், தொடர்ந்து அவர்கள் மின்சாரம் இல்லாமல் அவதிப்படுகின்றனர் என வெளியுறவுத்துறை அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

பெரிய அளிவலான தாக்குதல் எங்களுடைய எரிசக்தி துறையை மோசமாக பாதித்துள்ளதாக உக்ரைன் எரிசக்தி துறை அமைச்சரும் தெரிவித்துள்ளார்.

கடந்த 2022 ஆம் ஆண்டு போர் ஆரம்பித்ததில் இருந்து ரஷ்யா இது வரை இல்லாத அளவிற்கு கடந்த மாதம் உக்ரைனின் எரிசக்தி தொடர்பான கட்டமைப்புகள் மீது அதிக அளவில் தாக்குதல் நடத்தியது. இதனால் நாட்டின் பாதி அளவிலான பகுதிகள் இருளில் மூழ்கின.

இந்த தாக்குதல் உக்ரைன் நாட்டிற்கான எச்சரிக்கை எனக் கருதப்படுகிறது. மேலும் இதுபோன்ற வான் தாக்குதலை சமாளிக்க அதிகப்படியான வான் பாதுகாப்பு அமைப்பு தேவை என அதிகாரிகள் கேட்டு வரும் நிலை உருவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஐ.எம்.எவ். நிறைவேற்றுப் பணிப்பாளராக ஜோர்ஜியேவா மீண்டும் நியமிக்கப்பட்டார்

சர்வதேச நாணய நிதியத்தின் (ஐ.எம்.எவ்வின்) நிறைவேற்றுப் பணிப்பாளராக எதிர்வரும் 05 வருடங்களுக்குப் பணியாற்று வதற்காக கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு கூட்டத்தின்போதே அவர் நிறைவேற்றுப் பணிப்பாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதன்படி, 2024 ஒக்டோபர் 1 ஆம் திகதி முதல் எதிர்வரும் 05 ஆண்டுகளுக்கு கிரிஸ்டலினா ஜோர்ஜியேவா சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளராக பணியாற்றுவார் என குறிப்பிடப்பட்டுள்ளது.



# கனடா முரசு

பக்கங்கள் 06

சனிக்கிழமை 13/04/2024


## டொராண்டோ டவுன்டவுனில் 2 கத்திக்குத்துச் சம்பவங்கள்

ஒன்ராரியோ,ஏப்ரல்13

டொராண்டோ டவுன்டவுனில் இடம்பெற்ற இரண்டு வெவ்வேறு கத்திக்குத்து சம்பவங்களைத் தொடர்ந்து இருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள C2



# புளொட் பூர்வீகக் குடியினருக்கு உரியதை கனடா வழங்கவில்லை

## உடன்படிக்கை மீறல் என உயர்நீதிமன்றம் 7-0 என்ற அடிப்படையில் நேற்றுத் தீர்ப்பு

**அல்பேர்ட்டா,ஏப்ரல்13**

**கனடிய அரசாங்கத்திற்கும், அல்பேர்ட்டாவின் பூர்வீகக் குடிகளுக்கும் இடையிலான உடன்படிக்கையின் கீழ் பெறவேண்டிய காணியை விட குறைவானதாகவே வழங்கப்பட்டதாக கனடிய உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.**

நேற்று ஏப்ரல் 12ஆம் திகதி கனடிய உயர்நீதிமன்றம் வழங்கிய 7-0 என்ற தீர்ப்பில், புளொட் பூர்வீகக் குடிகளுக்கு 420 சதுர கிலோமீற்றர்கள் மேலதிக காணிக்கான உரிமையுள்ளதாக தெரிவித்துள்ளது.

உடன்படிக்கையின் ஏற்பாடுகள் நேர்மையற்ற வகையில் மீறப்பட்டுள்ளன எனவும் அந்தத்வ்தீர்ப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

1877ஆம் ஆண்டு முன்னெடுக்கப்பட்ட இந்த உடன்படிக்கையின் உறுதிமொழிகளை கனடா நிறைவேற்றவில்லை என புளொட் பூர்வீகக் குடிகள் போராடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# கியூபெக்கின் மதச்சார்பின்மைச் சட்டத்திற்கு பிரான்ஸின் ஆதரவு உண்டு என்கிறார் அட்டால்



கியூபெக்,ஏப்ரல்13

கியூபெக் மாகாணத்தின் மதச்சார்பின்மை சட்டத்திற்கு பிரான்ஸின் ஆதரவு கிடைக்கும் என பிரான்ஸ் பிரதமர் கேப்ரியல் அட்டால் தெரிவித்துள்ளார்.

கனடாவிற்கு விஜயத்தின் ஒருகட்டமாக பிரான்ஸ் பிரதமர், கியூபெக்கிற்கும் விஜயம் செய்துள்ளார்.

எனினும், கனடிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுடனான சந்திப்பின் போது, அவர் கியூபெக்கின் மதச்சார்பின்மை சட்டம் குறித்து உரையாடவில்லை எனத் தெரிவித்துள்ளார்.

‘நான் வெளிநாட்டில் இருக்கும்போது, ஜனநாயக ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட, இந்த மாதிரியைத் தேர்ந்தெடுத்த அரசியல்வாதிகளிடம் பேசும்போது, இந்த மாதிரியுடன் அவர்கள் தனியாக இல்லை என்பதை அவர்களிடம் கூறுவது எனது பொறுப்பு என்று நான் நம்புகிறேன்’ என்று அட்டல் தெரிவித்துள்ளார்.




# பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழகத்தில் மேலும் 778 மாணவர்கள் இடங்கள் சேர்ப்பு

பிரிட்டிஷ் கொலம்பியா,ஏப்ரல்13

பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக் கழகம், மாகாண அரசாங்கத்தின் 23 மில்லியன் டொலர் முதலீட்டின் மூலம் அடுத்த ஆறு ஆண்டுகளில் தொழி நுட்பம் தொடர்பான திட்டங்களுக்கு மேலும் 778 மாணவர் இடங்களை சேர்க்கவுள்ளதாகத் தெரிவித்துள்ளது.

வென்கூவர் மற்றும் ஒகனகன் வளாகங்களில் உள்ள பயன்பாட்டு அறிவியல், மருத்துவம், மருந்து அறிவியல் மற்றும் அறிவியல் பீடங்களில் இருக்கும் திட்டங்களில் புதிய இடங்களை இந்த நிதி சேர்க்கும் என்று பல்கலைக்கழகம் ஓர் அறிக்கையில் கூறுகிறது.

வென்கூவர் வளாகத்தில் தரவு அறிவியலில் இளங்கலை பட்டம் மற்றும் பிரிட்டிஷ் கொலம்பியா பல்கலைக்கழக ஒகனகனில் உயிரி தொழில்நுட்பத்தில் முதுகலை ஆகிய இரண்டு புதிய திட்டங்களை தொடங்கவும் இந்த நிதி பயன்படுத்தப்படும்.

5.4 மில்லியன் டொலர் ஆய்வகங்கள் மற்றும் வகுப்பறைகளைச் சீரமைக்கும் மற்றும் புதுப்பிக்கும் என்று பல்கலைக்கழகம் கூறுகிறது. அதே நேரத்தில் 17.7 மில்லியன் டொலர்கள் நிதியானது திட்டமிடப்பட்ட விரிவாக்கத்தின் முதல் மூன்று ஆண்டுகளில் செயல்பாட்டு நிதிக்காக உள்ளது.

# சூடானின் உள்நாட்டுப் போரில் தப்பிவரும் மக்களுக்கு 132 மில்லியன் டொலர் உதவி

ஒன்ராரியோ,ஏப்ரல்13

சூடானின் உள்நாட்டுப் போரில் இருந்து தப்பிவரும் மக்களுக்கு 132 மில்லியன் டொலர் உதவி வழங்குவதாக சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஹ்மத் /ஹசென் தெரிவித்துள்ளார்.

இந்த நிதியுதவியில் அயல் நாடுகளுக்கு தப்பிச் சென்ற சூடானியர்கள் மற்றும் பரந்த அளவிலான வன்முறைகளுக்கு மத்தியில் சூடானில் சிக்கியவர்களுக்கு மனிதாபிமான உதவியாக 100 மில்லியன் டொலர்கள் அடங்கும்.



சூடானின் இராணுவப் பிரிவுகளின் சண்டைப் பிரிவுகள் கார்ட்டூமின் தெருக்களில் சண்டையிடத் தொடங்கியதிலிருந்து இடம்பெயர்ந்த 8.5 மில்லியனுக்கும் அதிகமான மக்களுக்கான வீடுகள், தங்குமிடம் மற்றும் சுகாதார சேவைகள் அந்த உதவியில் அடங்குகின்றன.

சூடான் மற்றும் தெற்கு சூடானில் பெண்களுக்கான பாலியல் மற்றும் இனப்பெருக்க ஆரோக்கியம் மற்றும் மத்திய ஆப்பிரிக்க குடியரசு, சாட் மற்றும் எத்தியோப்பியாவில் உள்ள பிற திட்டங்களுக்கு, மீதமுள்ள நிதி வளர்ச்சித் திட்டங்களுக்குச் செல்லும் என்று /ஹசென் கூறியுள்ளார்.

## டொராண்டோ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர்.பே ஸ்ட்ரீட் மற்றும் டன்டாஸ் ஸ்ட்ரீட் மேற்கில் மாலை 5:23 மணிக்கு கத்திச் சம்பவம் ஒன்று இடம்பெற்றதாகவும், மற்றைய கத்திக் குத்து சம்பவம் ஷேர்போன் ஸ்ட்ரீட் மற்றும் டன்டாஸ் ஸ்ட்ரீட் ஈஸ்ட் பகுதியில் இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

பாதிக்கப்பட்டவர்கள் தீவிரமான ஆனால் உயிருக்கு ஆபத்தான நிலையில் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது. சந்தேக நபர் குறித்து பொலிஸாருக்கு எந்த தகவலும் இல்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




குணம்ஸ்
சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
அனைவருக்கும்
இனிய
சித்திரைப் புத்தாண்டு
வாழ்த்துகள்
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# பிரிட்டிஷ் கொலம்பியாவில் கடுமையான வறட்சி நிலை!

கனடாவில் உள்ள பிரிட்டிஷ் கொலம்பிய மாகாணங்களில் கடுமையான வறட்சி நிலவி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பகுதிகளில் ஆறுகள் வற்றி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. மாகாணத்தின் ஆறுகளின் நீர் மட்டம் குறைந்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. பிரிட்டிஷ் கொலம்பியாவின் வடக்கு பகுதிகளில் அதிகளவில் இவ்வாறு வறட்சி நிலவி வருவதாகக் கூறப்ப டுகின்றது.

மேலும் பிரிட்டிஷ் கொலம்பியாவில் பல ஆண்டுகள் இல்லாத அளவிற்கு இம்முறை வறட்சி நிலவி வருகின்றது.

மாகாணத்தில் நிலவிவரும் வறட்சி நிலைமையானது மக்களின் இயல்பு வாழ்க்கையை பாதித்துள்ளது.



# கார்பன் விலையைப் புதிய ஜனநாயகக் கட்சியினர் எதிர்ப்பது ஏன் எனப் புரியவில்லையாம் பிரதமருக்கு

ஒன்ராரியோ,ஏப்ரல்13

கார்பன் வரி தொடர்பில் புதிய ஜன நாயகக் கட்சியினர் எதிர்ப்பு தெரிவிப்பதற்கான காரணம் தமக்குத் தெரியவில்லை என பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

மாசு தொடர்பில் கட்டணம் அறவிடுதலுக்கு ஆதரவாகவே புதிய ஜனநயாகக் கட்சி செயற்பட்டு வந்த போதிலும் இப்போது மாறுபட்ட கருத்தினை கொண்டிருப்பதற்கான காரணம் தமக்குத் தெரியவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில், புதிய ஜனநாயகக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கார்பன் வரி தொடர்பான பகிரங்க விவாதத்தில் கலந்துகொள்வதற்கு மாகாண முதல்வர்கள் பிரதமரை அழைத்து வருகின்றமையை நியாயப்படுத்திக் கருத்து வெளியிட்டிருந்தனர்.

சில கன்சர்வேட்டிவ் நாடாளுமன்ற உறுப்பினர்களும், மாகாண முதல்வர்களும் எதிர்ப்பு தெரிவிப்பதால் காலநிலை மாற்றத்திற்கு எதிரான தமது போராட்டத்தை நிறுத்த முடியாது என ஜஸ்டின் ட்ரூடோ சுட்டிக்காட்டியுள்ளார்.



# நகராட்சிகளுக்கு கட்டடச் சலுகை; அல்பேர்ட்டா முதல்வர் எதிர்ப்பில்லை

அல்பேர்ட்டா,ஏப்ரல்13

கன்சர்வேடிவ் தலைவர் பியர் பொலிவர் வீட்டு நிர்மாணத்தை ஊக்குவிப்பதற்கு நகராட்சிகளுக்கு கட்டட சலுகை வழங்கும் திட்டத்தில் தமக்குப் பிரச்சினை எதுவும் இல்லை என அல்பேர்ட்டா முதல்வர் டேனியல் ஸ்மித் தெரிவித்துள்ளார்.

அல்பேர்ட்டா நகரங்கள் மத்திய அரசாங்கத்துடன் நேரடியாக பேரம் பேசுவதைத் தடுக்கும் மசோதாவைத் தாக்கல் செய்த சில நாள்களுக்குப் பிறகு, ஒட்டாவாவில் நடந்த கன்சர்வேட்டிவ் கட்சியின் வருடாந்த வலையமைப்பாக்கல் மாநாட்டில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே அவர் அதனைத் தெரிவித்துள்ளார்.

இதன்போது, அல்பர்ட்டாவின் செயற்பாடுகளில் இருந்து விலகி இருக்குமாறு பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவுக்கு அவர் பகிரங்கமாக தெரிவித்தார்.

# 2031ஆம் ஆண்டுக்குள் 3.9 மில்லியன் வீடுகள்!

## நிர்மாணிக்கத் திட்டம் என்கிறார் பிரதமர் ட்ரூடோ




ஒன்ராரியோ,ஏப்ரல்13

2031ஆம் ஆண்டுக்குள் 3.9 மில்லியன் வீடுகளை நிர்மாணிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக ஆளும் லிபரல் கட்சி தெரிவித்துள்ளது.

வோன் நகரில் இடம்பெற்ற நிகழ்வின் போது இது தொடர்பான அறிவிப்பை பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

கனடா இதுவரை காணாத ஒரு முழுமையான திட்டம் ஒன்றை அறிவிப்பதாக இதன்போது ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

மாகாணங்கள், மற்றும் நகரங்களுடன் இணைந்து இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவுள்ளதாக பிரதமர் குறிப்பிட்டுள்ளார்.

2030ஆம் ஆண்டுக்குள் கனடாவின் வீடு சார்ந்த பிரச்சினையைத் தீர்ப்பதற்கு 3.1 மில்லியன் வீடுகள் நிர்மாணிக்கப்படல் வேண்டும் என நாடாளுமன்றத்தின் வரவு – செலவுத் திட்டம் அலுவலகம் அண்மையில் தெரிவித்திருந்தது.

# கனடாவில் திருடப்பட்ட வாகனங்களை வாடகைக்கு விட்ட இரண்டு பேர் கைது

கனடாவில் திருடப்பட்ட வாகனங்களை வாடகைக்கு விட்ட நபர்களுக்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மிஸ்ஸிசாகாவில் இவ்வாறு களவாடப்பட்ட வாகனங்கள் வாடகைக்கு விடப்பட்டுள்ளன எனப் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முறைப்பாடு குறித்து விசாரணை நடத்திய போது களவாடப்பட்ட 22 வாகனங்கள் இவ்வாறு வாடகைக்கு விடப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இதற்குப் போலி இலக்கத்தகடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விசாரணைகளின் போது களவாடப்பட்ட 22 வாகனங்கள் மீட்கப்பட்டுள்ளன எனவும் இவற்றின் பெறுமதி 1.6 மில்லியன் டொலர்கள் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.




இந்த சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டின் பேரில் இரண்டு பேரை கனடியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

# சீனாவின் விண்வெளி ஆய்வு நிலையத்துடன் தொடர்பா? கனடிய விண்வெளி ஆய்வுப் பொறியியலாளர் விடுவிப்பு!

ஒன்ராரியோ,ஏப்ரல்13

சீனாவின் விண்வெளி ஆராய்ச்சி நிலையத்துடன் தொடர்பு வைத்திருந்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டிருந்த கனடிய விண்வெளி ஆராய்ச்சி நிலையத்தின் முன்னாள் பொறியிலாளர் அந்த குற்றச்சாட்டில் இருந்து விலக்கப்பட்டுள்ளார்.

மொன்ரியல் புறநகர்ப்பகுதியைச் சேர்ந்த 63 வயதான வென்பிங் ஷெங் தமது பதவியைப் பயன்படுத்தி சீன நிறுவனத்திற்கு ஆதரவாக செயற்பட்டார் எனக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டில் இருந்து மொன்ரியல் நீதிமன்றம் அவரை விடுவித்துள்ளது.

CSA ASC

Canadian Space Agency | Agence spatiale canadienne

ஷெங்கின் செயற்பாடுகளுக்கு ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம் என்ற போதிலும், சீனாவுடனான தொடர்பை அரச தரப்பு நிரூபிக்கத் தவறிவிட்டதாக தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.


